செ.வெ.எண்: 568 நாள்: 04.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.10.2021) நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, கோவிட்-19 தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளுடன் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்றையதினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பட்டா மாறுதல், விலையில்லா வீட்டுமனைப் பட்டா, வங்கிக்கடன் உதவி, பசுமைவீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 340 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அளித்தனர். இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

முன்னதாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் கிருத்துவ தேவாலயம் பழுதுபார்த்தல் மற்றும் சீரமைப்பிற்காக குளத்தூர் வட்டம், வடக்கு துவரவயல், அந்தோணியார் தேவாலயத்திற்கு ரூ.2,08,500 மதிப்பிலும், ஆலங்குடி வட்டம், பாத்திமா நகர், பாத்திமா தேவாலயத்திற்கு ரூ.2,25,000 மதிப்பிலும் முதல் தவணை நிதியுதவித் தொகைக்கான காசோலைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 6 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.32,600 மதிப்பீட்டில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம், மடக்கு சக்கர நாற்காலி, காதொலிக் கருவி, ஊன்று கோல் உள்ளிட்ட பல்வேறு உதவி உபகரணங்களையும் நலத்திட்ட உதவிகளாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முத்தமிழ்செல்வன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) கிருஷ்ணன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சத்தியமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) து.தங்கவேல் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**